
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | மே 26, 2022 | புரட்சி 21 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00



### சன் தொலைக்காட்சிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அளித்த பேட்டி

# ‘நீண்டகாலமாக சிறைப்படுத்தப்பட்ட இஸ்லாமியர் உள்ளிட்ட சிறைவாசிகளை விடுவிக்க - அரசு முன்வர வேண்டும்!

**சன் தொலைக்காட்சிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அளித்த பேட்டி:**

பேரறிவாளன் விடுதலை என்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். ஈழ ஆதரவாளன் என்ற முறையில், ஈழம் தொடர்பானது என்று கருதிக் கொண்டு, ஏதோ பயங்கரவாதம் நடந்து விட்டதாக பேசிக்கொண்டு அரசுகள் அவர் மீது வழக்கு புனைந்ததும், தண்டிக்கப்பட்டதும் வேறு கதை என்றாலும் கூட, இப்போது இவரது விடுதலையை 30 ஆண்டுகள் கடந்தும் காலம் தாழ்த்திக் கொண்டிருந்த அரசுகளுக்கு குறிப்பாக ஆளுநருக்கு தலையில் குட்டு வைத்ததைப் போல இந்த தீர்ப்பினை நான் பார்க்கிறேன். அவர் நேரடியான குற்றச் செயலில் ஈடுபடவில்லை என்று வழக்கே கூறினாலும், அவருக்கு உட்சபட்ச தண்டனை வழங்கப் பட்டது. அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்ட பின்பும், இவ்வளவு காலம் சிறையில் இருந்தார் என்பதை எந்த மனிதநேயர் களாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பெரும்பாலானோரால் தேசத் தந்தை என்று சொல்லப்படுகின்ற காந்தியைக் கொன்ற கோபால் கேட்சேவிற்கு 15 ஆண்டுகளில் விடுதலை தரப் பட்டது. ஆனால், இந்த வழக்கில் ஏனோ இவ்வளவு காலம் தாழ்த்தி விட்டார்கள். அதை ஏற்கெனவே உச்சநீதிமன்றம், 161 விதியின் கீழ் மாநில அரசு விடுதலை செய்யலாம் என்று கூறிய பின்பும், இதற்கான பரிந்துரையை 4 ஆண்டுகளுக்கு முன்பே மாநில அரசு கொடுத்து விட்ட பின்பும், ஆளுநர், அரசியல் சட்டத்தில் கால வரையறை இல்லை என்ற காரணத்தால், நீட்டித்துக் கொண்டே இருந்தது என்பது, ஜனநாயகவாதிகளால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். எனவேதான் இந்த வழக்கை பேரறிவாளன் உச்சநீதிமன்றம் எடுத்துச் சென்றார்.

உச்சநீதிமன்றம் கூறியது, “ஆளுநர் இதை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இல்லையென்றால் நீதிமன்றம் இதில் தலையிட வேண்டி வரும்” என்று கூறிக் கொண்டே இருந்தது. ஆனால் ஆளுநர் தரப்பிலிருந்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆளுநருக்காக ஒன்றிய அரசு வழக்கறிஞர் வாதாடிய போதும், அவர்களிடம் உச்சநீதிமன்றம், “ஆளுநருக்காக ஏன் ஒன்றிய அரசு வாதாடுகிறது” என்ற கேள்வியை வைத்தார்கள்.

இப்படி பலமுறை பல வாய்ப்புகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டும், விடுதலை செய்ய மாட்டோம் என்று பிடிவாதமாக இருந்த ஒன்றிய அரசுக்கும், அவர்களுடைய கங்காணியாக தமிழ்நாட்டில் இருக்கிற ஆளுநருக்கும், இது ஒரு எச்சரிக்கை போல கிடைத்த தீர்ப்பு என்று நாங்கள் நம்புகிறோம்.

மாநில உரிமை என்று வருகிறபோது, மாநில அமைச்சரவை நிறைவேற்றிய தீர்மானத்தை ஆளுநர் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்பதை இந்த வழக்கு மீண்டும் உறுதி செய்திருக்கிறது. இந்த வகையில் பேரறிவாளன் விடுதலை மகிழ்ச்சி அளிக்கிறது. அமைச்சரவை பரிந்துரைத்தது அனைவருக்கும் தான். பேரறிவாளன் நீதிமன்றம் சென்றதால் அவருக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. மற்றவர்களின் விடுதலைக்கான பரிந்துரையை இப்போதாவது ஆளுநர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.



மற்றொரு பார்வையில் பார்த்தால் நீண்டகால சிறைவாசிகள் பல பேர் இருக்கின்றனர். குறிப்பாக இஸ்லாமிய சிறைவாசிகள். நீண்ட காலமாக அவர்களை சிறையில் அடைத்து வைத்துள்ளார்கள். இஸ்லாமியர்கள் என்பதால் மட்டுமே சிறைபடுத்தப்பட்டுள்ளார்களா? என்று எண்ணத் தோன்றுகிறது. இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலையை மாநில அரசு தள்ளி போடக்கூடாது. அவர்களை விடுவிக்கவும் மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, வீரப்பன் தொடர்பான வழக்கில் அவரது சகோதரர் மற்றும் இன்னும் சிலரும் 30 ஆண்டுகளாக சிறையில் இருக்கிறார்கள். அவர்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

சிறை என்பது மனிதனை திருத்துவதற்குத் தானே தவிர மனிதனை தண்டிப்பதற்கு அல்ல. அந்த தண்டனையைக் கூட சிறைவாசிகளின் குடும்பத்தினர் தான் அனுபவிக்கின்றனர் என்பது தான் எதார்த்தத்தில் இருக்கிற உண்மை என்பதை கருத்தில் கொண்டு, நீண்டகால சிறைவாசிகளை தமிழ்நாடு அரசு விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம்.

மீண்டும் ஒருமுறை பேரறிவாளன் விடுதலையை ஒரு ஈழ விடுதலை ஆதரவாளனாக மட்டுமில்லை எங்கள் குடும்பத்துப் பிள்ளை என்பதற்காக மட்டுமல்லாமல் ஒரு மனித உரிமை ஆர்வலர் என்ற அடிப்படையிலும் வரவேற்கிறோம். மாநில உரிமையை உறுதி செய்துள்ள இத்தீர்ப்புக்காக மீண்டும் ஒருமுறை வரவேற்கிறோம் என்றார் கொளத்தூர் மணி.

## சதுர்வேதிமங்கலம் – ஆரிய மாடல்
## சமத்துவபுரம் – திராவிட மாடல்

தமிழ்நாட்டில் தமிழ் மன்னர்கள் பலரும் ஆரியத்தைக் கொண்டாடியதாகவே வரலாறு கூறுகிறது. ‘பிராமணர்’களுக்கு ஊர்களும் கிராமங்களும் இலவசமாக வழங்கப்பட்டன. வேதப் பார்ப்பனர்ககளின் வேத அறிவே உலகத்தை வாழ்விக்கும் என்று மன்னர்கள் நம்பினார்கள். அதற்குப் பெயர் ‘சதுர்வேதிமங்கலம்’; தமிழ் தாத்தா என்று கொண்டாடப்படும் சங்க இலக்கிய சுவடிகளைத் தொகுத்த உ.வே.சாமிநாதய்யர், தனது பிறந்த ஊரான ‘உத்தமதானபுரம்’ பிராமணர்களுக்கு ‘தானமாக’ வழங்கப்பட்ட ஊர் என்பதை தனது சுயசரிதையில் பதிவு செய்திருக்கிறார். ஒரு அரசர், தனது வேதபண்டிதர் பரிவாரங்களுடன் தங்கள் கிராமத்தில் ஒரு மரத்தடியில் ஓய்வு எடுத்து, உணவு உண்டு, வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொண்டாராம். பிறகுதான் அன்றைய தினம் அமாவாசை என்பது தெரிந்து அதிர்ந்து போனாராம். அமாவாசையில் வெற்றிலைப் பாக்கு போடுவது- தெய்வக் குற்றமாம். இந்தக் ‘குற்றத்துக்கு’ பரிகாரம் தேட, அருகிலிருந்த வேத பண்டிதர்கள் ஆலோசனைப்படி அந்தப் பகுதியை வேத பண்டிதர்களுக்கு தானமாக்கி வீடுகளைக் கட்டித் தந்தாராம். அதுவே தான் பிறந்த உத்தமதானபுரம் வரலாறு என்று பதிவு செய்திருக்கிறார். அமாவாசையன்று வெற்றிலைப்பாக்கு போட்டக் குற்றத்துக்காக பார்ப்பனர்களுக்கு வீடுகளையும் ஊர்களையும் வழங்கியது ‘ஆரிய’ மாடல் ஆட்சி.

இதே குடந்தை அருகே உள்ள ‘மாதிரி மங்கலம்’ என்ற ஊரும் பார்ப்பனர்களுக்கு தானமாக வழங்கப்பட்டதுதான். பார்ப்பன ஜாதிக் கொடுமைகளை எதிர்த்து கருஞ்சட்டை வீரர் பெரியார் தொண்டர் என்.டி. சாமி, மாதிரி மங்கலத்தில் களமாடினர். தீண்டப்படாத மக்கள் சாவுக்கு சேதி சொல்ல மறுத்து, இழவு வீட்டுக்கு பறையடிக்க மறுத்து, பறைகளை நெருப்பில் போட்டுக் கொளுத்தினர். பார்ப்பனர் ஆதிக்க ஜாதியினர் நிறைந்த பகுதியில் தீண்டப்படாத மக்கள் குடியேற்றப்பட்டனர். ஆதிக்க ஜாதி நிறைந்த பகுதியில் ‘தலித்’ மக்களுக்கு தனது சொந்த முயற்சியில் தேனீர்க் கடையைத் திறந்தார். பார்ப்பனர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பாாப்பனர் மற்றும் ஜாதி எதிர்ப்புப் புரட்சி, கொலை வரை நீண்டு வழக்குகள் நடந்தன. இது ஆர்யமாடலை எதிர்தது நடந்த களப் போராட்டம்.

வட இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ‘பிராமணர்களுக்கு’ தமிழ்நாட்டு விவசாயிகளின் நிலங்களை கட்டாயப்படுத்தி பறித்து தானமாக வழங்கப்பட்டது. நிலம் தர மறுத்தவர்கள் வன்முறையால் அடக்கப்பட்டனர் என்று ஆய்வாளர் கே.கே.பிள்ளை, தனது ‘தமிழக வரலாறு; மக்களும் பண்பாடும்’ ஆய்வு நூலில் பதிவு செய்துள்ளார். இதுதான் ஆரிய மாடல்.

திராவிட மாடல் இதை எதிர்த்துப் புரட்சி செய்தது. ‘அக்கிரகாரம் - ஊர்த் தெரு - சேரி’ என்று பிரிந்து கிடக்கும் நிலை, அவலம் இப்போதும் தொடருகிறது என்றால் வேத காலங்களில் இதன் கட்டமைப்பு எவ்வளவு வலிமையாக இருந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். கலைஞர் முதல்வராக இருந்தபோது ‘சதுர்வேதிமங்கலங்களுக்கு’ எதிராக உருவாக்கியதுதான் ‘பெரியார் சமத்துவபுரம்’. அனைத்து ஜாதியினருக்கும் ஒரே பகுதியில் வீடுகளைக் கட்டி, குடியேற்றி அதற்கு பெரியார் சமத்துவபுரம் என்று பெயர் சூட்டினார். இப்போது மு.க. ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த பிறகு இடையில் பராமரிப்பு இன்றி கைவிடப்பட்ட இத்திட்டத்துக்கு உயிர் கொடுக்க ரூ.100கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்; சமத்துவபுரங்களை மேலும் வளர்த்தெடுக்க முன் வந்துள்ளார்.

சதுர்வேதிமங்கலம் –ஆரிய மாடல்;
பெரியார் சமத்துவபுரம் - திராவிட மாடல்

**- குடந்தை மண்டல மாநாட்டில் விடுதலை இராசேந்திரன் உரையிலிருந்து**

# மே 29 – மதுரை செங்கடலாகட்டும்; கழகத் தோழர்களே திரண்டு வாரீர்!

வர்க்க-வர்ண ஆதிக்க ஒழிப்பு மாநாடும் செஞ்சட்டைப் பேரணியும் மதுரையில் மே 29 அன்று நிகழ இருக்கிறது. மதுரை காளவாசல் பகுதியிலிருந்து செஞ்சட்டைப் பேரணி பிற்பகல் 3 மணியளவில் தொடங்குகிறது. பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு ஒருங்கிணைக்கும் இந்தப் பேரணியில் பல்லாயிரக் கணக்கில் இளைஞர்கள், பெண்களும் ஆண்களுமாய் செஞ்சட்டை அணிந்து தமிழ்நாட்டின் தனித்துவத்தை வர்க்க-வர்ண ஆதிக்க சக்திகளுக்கு உணர்த்தப் போகிறார்கள்.

ஏற்கனவே கருஞ்சட்டைப் பேரணி, நீலச்சட்டைப் பேரணியை நடத்தி முடித்து இப்போது நிறைவாக செஞ்சட்டைப் பேரணி புறப்படுகிறது. பொதுத் துறை நிறுவனங்களை சீர்குலைத்து, பங்குகளைத் தனியாருக்கு வேகம் வேகமாக விற்கிறது ஒன்றிய ஆட்சி. பொன் முட்டையிடும் வாத்து, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் பங்குகளை அடிமாட்டு விலையில் விற்கிறது.

காப்பீடு என்றால் அது பணக்காரர்களுக்கு மட்டுமே என்ற கருத்தை உடைத்து,வெறும் 5 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்ட எல்.அய்.சி., சந்தை மதிப்பில் 32 இலட்சம் கோடி ரூபாயையும் காப்பீட்டு சந்தையில் 70 விழுக்காடு பாலிசிதாரர்களையும் கொண்டு அரசுக்கு வற்றாத ஊற்றாக அரசுக்கு செல்வத்தை வாரி வழங்கி வரும் நிறுவனம். அரசுத் துறையின் மேம்பாட்டுக்கு இது வரை 24,01,456.60 கோடி முதலீடு செய்துள்ளது. இந்த மாபெரும் மக்கள் சொத்தை தனியாருக்கு ஈவிரக்கமின்றி விற்கப் போகிறது - **இது வர்க்க ஆதிக்கம்!**

- ஏர் இந்தியா நிறுவனத்தை 2013இல் காங்கிரஸ் ஆட்சி தனியாருக்கு விற்க முற்பட்டபோது பொங்கி எழுந்த பா.ஜ.க., ஆட்சிக்கு வந்தவுடன் 2019இல் நூறு சதவீத பங்குகளையும் தனியாருக்கு விற்றது. 1953இல் டாட்டா பெருமுதலாளியிடமிருந்து காங்கிரஸ் ஆட்சி மீட்டெடுத்த இந்த நிறுவனத்தை மீண்டும் டாட்டாவுக்கே தாரை வார்க்கிறது ஒன்றிய ஆட்சி! இதன் சொத்து மதிப்பு ரூ. 50,000 ஆயிரம் கோடிக்கு அதிகம். வேலை செய்யும் ஊழியர்கள் 10,000 பேர். இப்போது விற்கப்பட்டதோ வெறும் ரூ. 18,000 கோடிக்கு மட்டும்! இப்போது ஒன்றிய ஆட்சியிடம் ஒரு விமானக் கம்பெனிகூட இல்லை. உக்ரைன் போரில் பாதிக்கப்பட்ட மாணவர்களை மீட்டு வர வாடகைக்கு விமானங்களை எடுக்க வேண்டிய நிலையில் தான் ஒன்றிய ஆட்சி இருந்தது. - **இது வர்க்கச் சுரண்டல்.**
- பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை ஏற்றப்பட்டு, ஏழை, எளிய, விளிம்பு நிலை மக்கள் மீது சுமையை ஏற்றும் ஒன்றிய ஆட்சி, பெரும் பணக்கார, பனியா கும்பலுக்கு பல்லாயிரம் கோடி வங்கிக் கடனை இரத்து செய்கிறது. மோடி ஆட்சியின் முதல் 7ஆண்டுகளில் வங்கிகளில் பெரும் பணக்காரர்கள் வாங்கி திருப்பிச் செலுத்தாத கடன் 10.72 இலட்சம் கோடி. அவர்கள் சொகுசாக வெளிநாடுகளுக்கு தப்பி ஓடி விட்டார்கள். ஒட்டகத்தை ஏமாற்ற அதன் முதுகுச் சுமையில் ஒரு மயில் இறகை எடுப்பதுபோல் ஒன்றிய ஆட்சி அவ்வப்போது பெட்ரோல் டீசல் விலைக் குறைப்பு நாடகமாடுகிறது.
- 2020-2021 நிதியாண்டில் அய்ந்து ஸ்டேட் வங்கிகள் மட்டும் திரும்பி வராது என்று தள்ளுபடி செய்த கடன் 89,688 கோடி. பயனடைந்தவர்கள் ஏழை பாழைகள் அல்ல; பெரும் பணக்காரர்கள். - **இது வர்க்கச் சுரண்டல்!**

கொரனா காலத்தில் 40 இலட்சம் பேர் இந்தியாவில் மரணித்தார்கள் என்கிறது உலக சுகாதார நிறுவனம். உண்மையை மறைத்து மனித உயிர்களுடன் விளையாடியது மோடி ஆட்சி. தடுப்பூசிக்கு கட்டணம் கேட்டது;



நீதிமன்றம் தலையில் குட்டிய பிறகு பணிந்தது. சொந்த ஊர் திரும்புவோருக்கு இரயில்வே கூடுதல் கட்டணம் கேட்டது. மனிதாபிமான மற்ற ஏழை மக்களின் வர்க்கச் சுரண்டலுக்கு இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே.

இந்தியைப் படி; சமஸ்கிருதமே நமது பண்பாட்டு மொழி; இராமபகவானே தேசிய அடையாளம்; இஸ்லாமியர்களுக்கு எதிராக வன்முறை; குடியுரிமைப் பதிவு சட்டத்தில் இஸ்லாமியர்களை குடிமக்களாக ஏற்க மறுப்பு; ‘இந்தியா’ இந்துக்களின் நாடு என்று மதச்சார்பின்மையைக் குலைக்கும் வெறுப்புப் பேச்சு; மாட்டுக்கறி சாப்பிட்டால் அடித்துக் கொலை; பார்ப்பனியத்தை உயர்த்தி இஸ்லாமியரை தனிமைப்படுத்தி ஏழை எளிய விளிம்பு நிலை மக்களை மதத்தின் பிடிக்குள் திணித்து அவர்களின் வாழ்வுரிமைக்கு வேட்டு வைக்கும் வர்ணாஸ்ரம ஆட்சி நடக்கிறது.

ஜாதி எதிர்ப்பு பேச மாட்டார்கள்; ஆனால் பிற்படுத்தப்பட்டோர் காவலர் என்று பசப்பு காட்டுவார்கள். மருத்துவக் கல்லூரி பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டை மறுத்தார்கள். தமிழக அரசு சட்டப் போராட்டம் நடத்தி மீட்டது. ‘நீட்’ தேர்வைத் திணித்து, கிராமப்புற ஏழை எளிய மக்களின் மருத்துவக் கனவை சிதைக்கிறார்கள்; அரசுப் பள்ளி மாணவர்களும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டைக் கொண்டு வரவும் எதிர்ப்பு. - **இது வர்ணாஸ்ரம ஆதிக்கம்.**

தேசிய கல்வித் திட்டம் என்ற பெயரில் புதிய கல்வித் திட்டத்தைப் புகுத்தி, தமிழ்நாடு தனக்காகக் கட்டமைத்த சமூகநீதிக் கல்வியை குலைக்க திட்டம்; ஆளுநர்களை கைப்பாவையாக்கி மாநிலங்களின் உரிமைகளை கொள்கைகளை முடக்கத் துடிப்பு; நான்கு வர்ணத்தை நியாயப்படுத்தும் கீதையை கட்டாயப் பாடமாக்குகிறார்கள்; குடியரசு தின அணி வகுப்பில் தமிழ்நாட்டின் மதிப்பு மிக்க தலைவர்கள் வ.உ.சி., மருதுபாண்டியர்கள், வேலுநாச்சியார், அலங்கார ஊர்திகளுக்கு தடை; மாறாக அனுமான், ராமன், வேதக் கல்விச் சாலை, ஊர்திகளுக்கு அனுமதி. - **இது வர்ணாஸ்ரம வெறி.**

**சமஸ்கிருதம் பரப்ப கூடுதல் நிதி**

இந்து மதத்துக்குள் உயிர்த் துடிப்பாக இருக்கும் ஜாதியை எதிர்த்து வாய் திறக்க மாட்டார்கள். ஜாதி எதிர்ப்பாளர்களையும் ஜாதிக்குஊற்றான மனுசாஸ்திரம், வேத இதிகாசப் புராணங்களைக் கண்டித்தால் தேசத் துரோகி பட்டம்.

இப்படி வர்ணாஸ்ரம காவலர்களின் ஆட்சியே ஒன்றிய ஆட்சி என்பதற்கு ஏராளமாகப் பட்டியலிட முடியும்.

சிந்தனை கொள்கை செயல் திட்டங்களைக் கொண்ட அமைப்புகள் செயல்படும் பெருமைக்குரிய மாநிலம் தமிழ்நாடு. பொதுவுடைமை முகாமிலிருந்து ஜாதி எதிர்ப்பு போராட்டம் நடக்கும் பெரியாரிய அம்பேத்கரிய முகாமிலிருந்து பனியா - பெரு முதலாளிகள் சுரண்டல் எதிர்ப்புக் குரல். - **நாடு-நமது தமிழ்நாடு!**

இந்தியாவில் ஒற்றையாட்சி என்ற பார்ப்பன இராமராஜ்யத்தை நோக்கி வேக வேகமாக நடைபோடும் ஒன்றிய ஆட்சிக்கு எதிராக வலிமையான எதிர்ப்புக் குரல ஒலிக்கும் மாநிலங்களின் ஒன்றாக தமிழ்நாடு இருக்கிறது.

‘திராவிட மாடல்’ என்ற ஆரிய எதிர்ப்பு மாடலுக்குள் வர்க்க-வர்ண ஆதிக்க எதிர்ப்பு உள்ளடங்கியிருப்பதை நாம் புரிந்து கொண்டோம்; புரிந்து ஒன்றிணைகிறோம்; ஒன்றிணைந்து போராடுகிறோம்.

இளைஞர்களின் மாபெரும் வரலாற்று அணியைக் கட்டமைக்க நாம் தயாராக வேண்டும்;

வன்முறைக் கும்பலையும் விலைக்கு வாங்கப்பட்டவர்களையும் சமூக விரோதிகளையும் கட்சி உறுப்பினர்களாக்கிக் கொண்டு பா.ஜ.க. தலைமை மிரட்டிப் பார்க்கிறது. உள்ளாட்சித் தேர்தலில் ‘பூஜ்ய’ மதிப்பு பெற்ற பா.ஜ.க.வின் தலைவர் ஏதோ மக்கள் தலைவர்களைப்போல் கோமாளி வேடம் போட்டு மேடை நாடகங்களை அரங்கேற்றும் அரைவேக்காட்டு உருட்டல் மிரட்டல் பேச்சுகளை ஒரு பொருட்டாகவே சமூகநீதி மண் மதிக்காது என்பதை துரோகக் கோடரிக்காம்புகளுக்கு உணர்த்துவோம்.

**திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களே! நடந்து முடிந்த பேரணிகளில் கழகத்தின் வலிமையை கருஞ்சட்டையோடும் நீலச் சட்டையோடும் அணி வகுத்து நமது வலிமையை வெளிப்படுத்தி னோம்.**

**சிவப்பு சட்டைப் பேரணியிலும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் முத்திரையைப் பதிப்போம்.**

**குடும்பம் குடும்பமாக திரளுவோம்; கழகக் கொடி ஏந்தி வருவோம்; கருப்பும் நீலமும் சிவப்பும் எங்களுக்கு சனாதனத்தை வீழ்த்தும் ஆயுதங்கள் தான் என்பதை ஓங்கி - உரத்து முழக்கமிடுவோம்.**

**மே 29 - மதுரையை செஞ்சட்டைக் கடலில் நீந்த வைக்க கருப்புச் சட்டை நெஞ்சங்களே! சிவப்புடையுடன் வாருங்கள்! வர்க்க-வர்ண ஒழிப்பை முன்னெடுக்க வாருங்கள்!**



## மாநில உரிமைகளை உறுதிபடுத்தும் ‘ஜி.எஸ்.டி.’ தீர்ப்பு

மாநில உரிமைகளை உறுதிபடுத்தும் மற்றொரு தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கிறது. ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாரமன் தலைமையில் செயல்படும் ஜி.எஸ்.டி கவுன்சில் எடுக்கும் முடிவுகள், வெறும் பரிந்துரைகள் மட்டும் தான். அதை மாநில அரசுகள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று , உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கிறது. இந்த பிரச்சனையில், ஒன்றிய அரசுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதே அளவு சம உரிமை மாநில அரசுகளுக்கும் இருக்கிறது என்றும் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தி இருக்கிறது.

நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், “ஜி.எஸ்.டி கவுன்சில் என்பது அரசியல் சார்ந்த இடமாக தற்போது மாறியுள்ளது என்பதை மறுக்க முடியாது. இந்த நிலை இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தை முழுமையாக பாதிக்கச் செய்யும். எனவே ஜனநாயகமும், கூட்டாட்சியும் ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி பல்வேறு குழப்பங்களை தவிர்ப்பதற்காக மட்டுமே, கூட்டாட்சித் தத்துவத்தில் ஒன்றிய அரசிற்கு கூடுதல் அதிகாரத்தை வழங்குகிறது” என்று உச்சநீதிமன்றம் மேலும் தெளிவுபடுத்தி இருக்கிறது.

பேரறிவாளன் வழக்கில், “சிறைவாசிகளை விடுதலை செய்கிற உரிமை மாநில அரசுக்கு மட்டுமே உண்டு. அமைச்சரவை எடுக்கின்ற முடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் தந்தே ஆக வேண்டும். ஆளுநர் தனது விருப்பு, வெறுப்புகள் அடிப்படையில் செயல்பட முடியாது” என்று தீர்ப்பளித்துள்ள உச்ச நீதிமன்றம். தற்போது ஜி.எஸ்.டி குறித்தான தீர்ப்பிலும் மாநில உரிமையை உறுதிபடுத்தியுள்ளது. இரண்டு தீர்ப்புகளும் மாநில உரிமைகளுக்கு பச்சைக் கொடி காட்டுகிற தீர்ப்பாகும்.

# பார்ப்பன எதிர்ப்பு ஆன்மீகத்தையும் அரவணைத்ததே திராவிடக் கோட்பாடு

*மே 21இல் குடியாத்தத்தில் நடந்த கழக மண்டல மாநாட்டில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையிலிருந்து:*

குடியாத்தம், வேலூர் மாவட்டங்கள் திராவிடத்தின் கொள்கை வேர்களைத் தாங்கி நிற்கிறது, ஆரிய எதிர்ப்பு என்ற சனாதன வர்ணாஸ்ரம பார்ப்பன எதிர்ப்புக்கு களமாடிய முன்னோடிகள் இந்த மாவட்டத்தில் உண்டு. பள்ளிகொண்டா கிருஷ்ணசாமி, சமூக சீர்த்திருத்தப் படை ஒன்றை இப்பகுதியில் உருவாக்கி, தேனீர்க் கடை இரட்டைக் குவளைத் தீண்டாமை - பார்ப்பன உயர்ஜாதியினர் வீதிகளில் தீண்டப்படாத மக்கள் நடக்கும் உரிமை மறுக்கப்பட்ட சமூகக் கொடுமைகளை எதிர்த்து நேரடி நடவடிக்கையில் இறங்கினார். சாவு சேதி சொல்லவும், பறை அடிக்கவும் தீண்டப்படாத மக்கள் மீது அவமானங்கள் சுமத்தப்பட்டதை எதிர்த்து பறை எரிப்புப் போராட்டம் நடத்தியபோது திராவிடர் கழகத் தோழர்கள் அந்தப் போராட்டத்தில் பங்கேற்ற வேண்டும் என்று பெரியார் ‘விடுதலை’யில் அறிக்கை விடுத்தார். 1954இல் ஈரோட்டில் பெரியார் நடத்திய புத்தர் கொள்கை பரப்பு மாநாடு - குலக் கல்வி திட்ட எதிர்ப்பு மாநாடுகளில் பங்கேற்று ஆரிய வர்ணாஸ்ரமக் கருத்துகளை எதிர்த்ததோடு பல்லாயிரக்கணக்கில் புரோகித ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்தினார். குடியரசுக் கட்சியின் தலைவரானார். 1958இல் சுதந்திர நாள் துக்க நாள் என்றார். அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும்; பரம்பரை அர்ச்சகர் முறை ஒழிக்கப்பட வேண்டும்; கிராமத் தலைவர் பதவிகளை பரம்பரை அடிப்படையில் நியமிக்கக் கூடாது என்று போர்க் கொடி உயர்த்தினார். இதே போன்று தளபதி கிருட்டிணசாமி நடத்திய களப்போராட்டம் திராவிடத்தின் இலட்சியப் பாதையில் தான்!

அன்றைய காங்கிரஸ் கட்சியில் ஆரிய மாடல் ஆட்சியை இராஜகோபாலாச்சாரி முன்னெடுத்த போது அதே கட்சியிலிருந்த காமராசர் அதை எதிர்த்து திராவிடக் கொடியை கட்சிக்குள் உயர்த்தி, ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டம், பைத்தியக்காரத் திட்டம் என்று அறிவித்து, முதல்வராக வந்தவுடன் அதை ஒழித்தார். முதலமைச்சர் பதவியை ஏற்ற பிறகு, 1954இல் இதே குடியாத்தம் தொகுதியில் போட்டியிட்டபோது எதிர்க் கட்சியாக இருந்த அண்ணா, கட்சி அரசியலைப் புறந்தள்ளிவிட்டு, பார்ப்பன எதிர்ப்பு நோக்கில் காமராசருக்கு ஆதரவு தந்தார். ‘குணாளா குலக் கொழுந்தே’ என்று திராவிட நாடு ஏட்டில் புகழாரம் சூட்டினார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவராக காமராசர் உயர்ந்தபோது, திராவிட சித்தாந்தத்தின் மாநில உரிமைகளையே அவர் பேசியதோடு அன்றைய பிரதமர் இந்திராவிடம் மாநில உரிமைகள் குறித்து சிந்திக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று அறிவுறுத்தினார். மாநில முதல்வர்கள் கருத்துக்கு அகில இந்திய காங்கிரஸ் முன்னுரிமை தரவேண்டும் என்பதை கட்சிக்குள் செயல்படுத்தினார். காங்கிரஸ் தலைவரான தன்னையும் நிதியமைச்சரான மொரார்ஜி தேசாயையும் கலந்து ஆலோசிக்காமல் பிரதமர் இந்திரா, சர்வதேச நிதியத்தின் கட்டளையை ஏற்று ரூபாயின் மதிப்பை குறைத்தபோதுதான் தனக்கும் பிரதமர் இந்திராவுக்குமிடையே கருத்து மாறுபாடு தொடங்கியது என்று பேராசிரியர் நாகநாதனுக்கு அளித்த பேட்டியில் கூறியதை, பேராசிரியர் நாகநாதன் தனது கூட்டாட்சியியல் நூலில் பதிவு செய்துள்ளார்.

பசுவதைத் தடைச் சட்டத்தை காங்கிரஸ் கட்சிக்குள் கொண்டு வரவேண்டும் என்று காங்கிரசில் பார்ப்பனிய சக்திகள் முன்வைத்த கோரிக்கையை அகில இந்திய காங்கிரஸ் தலைவரான காமராசர் ஏற்க மறுத்தார். அதன் காரணமாகவே சாதுக்களும் ஆர்.எஸ்.எஸ். மதவெறிக் கும்பலும் டெல்லியில் அவரது வீட்டுக்கு தீ வைத்தனர். காமராசர் உயிர் தப்பினார்.

1975இல் தென் மாநிலங்கள் தங்களுக்குள் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி நீர், மின்சாரம் மற்றும் அரிசியை - தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியதோடு, இந்திராவிடம் கருத்து மாறுபாடு எழுந்த போது தமிழ்நாடு அளவில் ‘ஸ்தாபன காங்கிரஸ்’ கட்சியை உருவாக்கினார். தேசிய அரசியலில் இருந்தாலும் காமராசரின் ‘திராவிடச் சிந்தனையே’ அவரது அடையாளமாக இருந்தது.

பார்ப்பன எதிர்ப்பை உள்ளடக்கிய ஆன்மீகத்துக்கும் திராவிடக் கருத்தியல் தனது கதவைத் திறந்து வைத்திருந்தது. பழுத்த ஆன்மீகவாதியான ஓமாந்தூர் ராமசாமி (ரெட்டியார்) தமிழக முதலமைச்சராக இருந்தபோது அறநிலையத் துறையில் பார்ப்பனர் கொள்ளைகளைப் பட்டியல் போட்டுக் காட்டி, அறநிலையத்துறை சட்டத்துக்கு புத்துயிர் தந்தார். பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவினருக்கு முதன்முறையாக இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்தவரும் அவர்தான். ‘தாடி இல்லாத ராமசாமி நாயக்கரே - இந்த ராமசாமி ரெட்டியார்’ என்று பார்ப்பனர்கள் கொந்தளித்து காந்தியிடமே மனு கொடுத்தனர். நேர்மையின் சின்னமாக ஆரிய எதிர்ப்புடன் திராவிட சித்தாந்தமான சமூகநீதியைப் பின்பற்றிய ஓமந்தூரார், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பதவியில் நீடிக்க முடியவில்லை; “ஆரியம் முதுகில் குத்திவிட்டது; ஆனால் நீங்கள் நெஞ்சில் வீரத் தழும்புடன் வெளியேறுகிறீர்கள்; போய் வாருங்கள்” என்று அன்றைக்கு ‘விடுதலை’ நாளேடு எழுதியது.

நிறுவனமாக்கப்பட்ட வேதமதமான இந்து மதத்தின் சனாதனத்தை எதிர்த்து புரட்சி செய்தவர் வடலூர் வள்ளலார். வடமொழி எதிர்ப்போடு பார்ப்பனியர்களை கடவுளின் தரகர்களாக்கும் உருவ வழிபாட்டைப் புறக்கணித்தார். ‘விளக்கை’ ஏற்றி வணங்கச் சொன்னார், காவிக்கு மாற்றாக வெள்ளை உடை தரித்தார். திராவிட இயக்கம் வள்ளலாரை அரவணைத்தது. தி.மு.க. ஆட்சி வள்ளலார் ஆய்வு மய்யத்தை உருவாக்கும் திட்டத்தை அப்போது அறிவித்துள்ளது. குன்றக்குடி அடிகளார் என்ற காவி உடை புரட்சித் துறவி, பெரியாருடன் மேடையைப் பகிர்ந்து கொண்டு ஜாதி சனாதன எதிர்ப்பை சமூகநீதியை பொதுவுடைமைப் பேசினார். திராவிடத்தின் ஆரிய எதிர்ப்பு வறட்டுத் தனமான கடவுள் எதிர்ப்பு அல்ல; அது மனித சமத்துவம். சுயமரியாதையோடு சனாதன எதிர்ப்பு ஆன்மிக வாதிகளையும் அரவணைத்தது. அதற்கு வழிகாட்டியாக இருந்தது வேலூர் மாவட்டம்.

## ராஜீவ் உயிருக்கு ஆபத்து இருப்பது காங்கிரசுக்கு முன்கூட்டியே தெரியும்

# வாய் கட்டி போராட்டம் நடத்தும் காங்கிரசார் பதில் கூறுவார்களா?

பேரறிவாளன் விடுதலையை ஏற்கவே முடியாது என்று காங்கிரசாரும், மனுவாதிகளும் பொங்கு கிறார்கள். இவர்கள் கூறுவதில் நியாயம் இருக்கிறதா?

இந்த குற்றத்தில் நேரடியாக தொடர்புடைய 12 பேர் ஏற்கெனவே தேடுதல் வேட்டை என்ற பெயரால் காவல் துறையினால், சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்கள். அதாவது நீதிமன்றம் போகாமலேயே மரண தண்டனையை விதித்து விட்டார்கள். பிறகு 26 பேருக்கு, குற்றவாளிகளுக்கு உதவினார்கள், சதியில் ஈடுபட்டார்கள் என்று கூறி பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் ‘தடா’ சட்டத்தின் கீழ் வழக்கு நடந்தது. வழக்கு இரகசியமாக நடந்தது. காந்தி கொலையில் கூட வழக்கு பகிரங்கமாகவே நடந்தது. 26 பேருக்கும் தூக்கு தண்டனையை விதித்தது சிறப்பு நீதிமன்றம். இவர்கள் தடா சட்டத்தின் படி உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய முடியாது. நேரடியாக உச்சநீதிமன்றம் தான் போக வேண்டும். உச்சநீதி மன்றம் குற்றவாளி என்று கூறப்பட்ட 26 பேரில் 19 பேரை விடுதலை செய்து விட்டது. இதிலிருந்தே வழக்கு எப்படி சி.பி.அய்.யால் புனையப்பட்டது என்பதை புரிந்து கொள்ளலாம்.

இந்த வழக்கிற்கு தடா சட்டம் பொருந்தாது என்று கூறிய உச்சநீதிமன்றம், அதே நேரத்தில் விசாரணையில் குற்றம்சாட்டப்பட்டவர் தரும் ஒப்புதல் வாக்குமூலத்தை அவர்களுக்கு எதிராக பயன்படுத்தலாம் என்ற கொடூரமான பிரிவை மட்டும் அப்படியே பயன்படுத்திக் கொண்டது. இந்த முரண்பாட்டை எவரும் கேள்வி கேட்கத் துணிய வில்லை. அப்படி பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலத்தைக்கூட நேர்மையாகப் பதிவு செய்யவில்லை. குறிப்பாக, “பேரறிவாளன் கூறியபடி, நான் எழுத வில்லை அவர் தண்டிக்கப்படுவதற்காக மாற்றி எழுதினேன்” என்று வாக்குமூலத்தை பதிவு செய்த அய்.பி.எஸ். அதிகாரி தியாகராஜன், பிறகு ஒப்புக் கொண்டு, உச்சநீதிமன்றத்தில் மனுவும் தாக்கல் செய்தார். தூக்குத் தண்டனைக்குள்ளான முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகிய மூன்று பேர் தங்களது தண்டனையைக் குறைக்கக் கோரி குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பினார்கள். 11 ஆண்டுகள் அது குடியரசுத் தலைவர் மாளிகையில் கிடப்பில் போடப்பட்டது. உச்சநீதிமன்றத்தில் நால்வருக்கு தூக்குத் தண்டனை விதித்த மூத்த நீதிபதி கே.டி.தாமஸ், இந்த வழக்கு முறையாக விசாரிக்கப்பட வில்லை. அவர்களுக்கு தூக்குத் தண்டனையை நிறுத் துங்கள் என்று சோனியாவுக்கு கடிதமே எழுதினார்.

கருணை மனு போடப்பட்டு 5 ஆண்டுகள் முடிந்துவிட்டாலே அவர்களுக்கு ஆயுள் தண்டனையாக குறைத்துவிடலாம் என்று பல உச்சநீதிமன்ற தீர்ப்புகள் இருந்தாலும் அதை பொருட்படுத்தாமல் 11 ஆண்டுகளுக்குப் பிறகு தூக்குக்கு நாள் குறித்தது அன்றைய ஒன்றிய காங்கிரஸ் ஆட்சி. குறிப்பாக உள்துறை அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் அவர்களின் துறை தான் தூக்கு தண்டனைக்கு நாளும் குறித்தது. செங்கொடி தூக்கு தண்டனையை நிறுத்தக் கோரி தன்னைத் தானே எரித்துக் கொண்டு உயிர்த்தியாகம் செய்தார். தமிழகம் கொந்தளித்தது. சென்னை உயர்நீதிமன்றம் தூக்கு தண்டனைக்கு தடை விதித்தது. அதே நாளில் முதல்வர் ஜெயலலிதா இதே கோரிக்கைக்காக தீர்மானத்தை சட்டமன்றத்திலும் நிறைவேற்றினார். இது இந்த வழக்கின் பின்னணி.

ஒரு வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் பல ஆண்டுகள் சிறை வாழ்க்கை அனுபவித்த பிறகு அவர்களை முன்கூட்டியே விடுதலை செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு. சிறை என்பது குற்றவாளிகளை சீர்திருத்த வேண்டிய இடமே தவிர, அவர்களை வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கும் இடமல்ல. சிறையில் அவர்கள் எப்படி நன்னடத்தை யுடன் நடந்து கொண்டார்கள் என்பது தான் சிறை வாசிகளை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கான அடிப்படை. அவர்கள் எந்த குற்றத்தை செய்தார்கள் என்பது விடுவிப்பதற்கான அடிப்படை அல்ல.

இப்போது சிறைவாசிகளை விடுவிக்கும் உரிமை மாநில அரசுக்கு மட்டுமே உண்டு, ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை தடை படுத்த முடியாது. குடியரசுத் தலைவருக்கும் இதில் எந்தப் பங்கும் இல்லை என்று, உச்சநீதிமன்றம் தீர்ப்பில் கூறியதோடு, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்திருக்கிறது. இதில் மனுவாதிகளும், காங்கிரசாரும் பொங்குவதில் என்ன நியாயம் இருக்கிறது ?

காந்தி கொலையில் ஆயுள் தண்டனை பெற்ற கோபால் கோட்சேவை 15 ஆண்டுகளில் விடுதலை செய்தது இதே காங்கிரஸ் கட்சி ஆட்சி தான். குஜராத்தில் இரண்டாயிரம் இஸ்லாமியர்களை இனப்படுகொலை செய்தபோது அங்கே முதலமைச்சராக இருந்தவர் பிரதமராக இருக்கும் மோடி, உச்சநீதிமன்றத்தால் கண்டிக்கப்பட்டவர் தான். இந்த வரலாற்று உண்மைகளையெல்லாம் மறந்துவிட்டு பொங்கி எழ வேண்டாம்.

இராஜிவ் பங்கேற்ற ஸ்ரீபெரும்பந்தூர் கூட்டம் அவரது முதல் நிகழ்ச்சி நிரலில் இல்லை. கடைசியாகத்தான் சேர்க்கப்பட்டது. சேர்த்தது யார் என்பது இதுவரை விடை தெரியாத கேள்வி? இராஜிவ் காந்திக்கு ஸ்ரீபெரும்பந்தூரில் ஏதோ ஒரு ஆபத்து நேர இருக்கிறது என்று முன்கூட்டியே காங்கிரசாருக்குத் தெரிந்திருக்கிறது. ஆனாலும், கூட்டத்தை நிறுத்த அவர்கள் தயாராக இல்லை. கூட்டம் நடைபெறும் மே 21, 1991 அன்று காலை காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தமிழ்நாடு ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங்கை சந்தித்து “ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தை அனுமதிக்கக்கூடாது அந்த கூட்டம் ஆபத்தானது; ஆளுநர் தலையிட்டு தடுக்க வேண்டும்” என்று மனு கொடுத்தார். ஏடுகளில் பதிவான வரலாற்றுச் செய்தி இது. இராஜிவ் படுகொலையான பின்பு அவர் அருகே ஒரு காங்கிரஸ் தலைவர்கள் கூட இல்லாமல் போனது இன்னும் கூடுதல் வியப்பு. தலைவரைக் காப்பாற்ற அன்று அவரைச் சூழ்ந்து நிற்காமல், ஓடிப் பதுங்கியவர்கள் காங்கிரசார்! இன்று வாய்க் கட்டிப் போராட்டம் நடத்தும் தமிழ்நாடு காங்கிரசார் இதற்கெல்லாம் என்ன பதிலைக் கூறப்போகிறார்கள் ?

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# குடந்தை – கீழப்பாவூர்–குடியாத்தத்தில் சிறப்புடன் நடந்த மண்டல மாநாடுகள்

**குடந்தையில்:** ‘நமக்கான அடையாளம் திராவிட மாடல்’ என்ற முழக்கத்தை முன் வைத்து கும்பகோணம் மீன் மார்க்கெட் திடலில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மண்டல மாநாடு 16.5.2022 அன்று மாலை சிறப்புடன்




நடைபெற்றது. மாவட்டக் கழகத் தலைவர் மு. இளங்கோவன் தலைமையில் சா.வெங்கடேசன் (ஒன்றிய அமைப்பாளர்) முன்னிலையில் நடைபெற்றது. கு.பாரி (தஞ்சை மாவட்ட செயலாளர், தி.வி.க.), தெ. மகேசு (மாவட்டச் செயலாளர்), திருச்சி நாகம்மையார் இல்லத்துப் பெண்ணைத் திருமணம் செய்தவரும், திராவிடர் கழகத் தோழருமான பவுண்டாரீகபுரம் முருகேசன், பொறியாளர் திருநாவுக்கரசு (உழவர் இயக்கம்), சி.த. திருவேங்கடம் (மாவட்ட அமைப்பாளர்), சா. விவேகானந்தன் (மண்டல செயலாளர் வி.சி.க.) உள்ளிட்டோர் மாநாட்டில் பேசினர்.

முன்னதாக, பெரம்பலூர் தாமோதரன், ‘மந்திரமா-தந்திரமா’ நிகழ்ச்சி நடைபெற்றது. திராவிடர் கழக மாவட்ட மகளிரணி செயலாளர் திரிபுரசுந்தரி மற்றும் தி.க. தோழர்கள் குணா, சங்கர், கழகத் தலைவர்-பொதுச் செயலாளருக்கு துண்டுகளை அணிவித்து மகிழ்ந்தனர். கரிகாலன் நன்றி கூறினார். தொடர்ந்து 20 தெருமுனைக் கூட்டங்கள் ஒருவாரகாலம் நடை பெற்றன. இறுதியாக, கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்கள். திவிக ஒன்றிய அமைப்பாளர் மா.கரிகாலன் நன்றி கூறினார்.






**கீழப்பாவூரில்:** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் “நமக்கான அடையாளம் - திராவிட மாடல்” எனும் முழக்கத்தோடு தென்காசி மாவட்டம் கீழப்பாவூரில் மண்டல மாநாடு 14.05.2022 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் சவுந்திரபாண்டியனார் திடலில் நடைபெற்றது.

மாநாட்டின் துவக்கமாக பள்ளத்தூர் நாவலரசு, யாழினி ஆகியோர் பகுத்தறிவு பாடல்கள் பாடினர். மாநாட்டிற்கு தென்காசி தி.வி.க மாவட்ட தலைவர் அ. மாசிலாமணி தலைமை வகித்தார்.

தோழர்கள் சா. மாரிச்சாமி, மாவட்ட துணைச் செயலாளர், தூ-டி. தி.வி.க. - கடையம் சங்கர், மாவட்ட பொருளாளர் தென்காசி தி.வி.க. - சி. ஆ. காசிராசன், மாவட்டச் செயலாளர், நெல்லை தி.வி.க - செட்டியூர் சேர்மத்துரை, கீழப்பாவூர் ஒன்றிய தி.வி.க. செயலாளர் - அருணாபேரி ச. சுப்பையா கீழப்பாவூர் ஒன்றிய தி.வி.க. தலைவர் - சா.த.பிரபாகரன், தூ-டி. தி.வி.க. - ஆழ்வை உதயக்குமார், கபாலிபாறை சுரேஷ், ஆரியாங்காவூர் செ.தங்கத்துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தென்காசி தி.வி.க மாவட்ட செயலாளர் பொ.பெ.சு.அன்பரசு வரவேற்புரை யாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாநாட்டு சிறப்புரையாற்றினார்கள்.

முன்னதாக கழகப் பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன் - கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி - கழகத்தின் பொருளாளர் திருப்பூர் துரைசாமி - நெல்லை தி.வி.க.மாவட்டத் தலைவர் பா. பால்வண்ணன் - தலைமை குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் - தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் தூடி கா.கண்ணதாசன், திருப்பூர் மகிழவன் - தூடி தி.வி.க. மாவட்ட துணைத் தலைவர் ச.கா. பாலசுப்பிர மணியன் - தென்காசி தமிழ்நாடு அறிவியல் மன்றத் தோழர் ச.தமிழ்ச் செல்வன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களாக, தோழர்கள் கூ.சு. இராமசந்திரன், கீழப்பாவூர் ஒன்றிய தி.மு.க. செயலாளர் - பொன். அறிவழகன், கீழப்பாவூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் - மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ், மற்றும் MCPI (U) பொதுச் செயலாளர் சுலீப் தாமோதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். தூடி தி.வி.க மாவட்ட பொருளாளர் கோ. சந்திரசேகர் நன்றியுரையாற்றினார்.

மாநாட்டில் பங்கேற்ற சிறப்பு அழைப்பாளர்கள், சிறப்புரையாற்றி யவர்கள் மற்றும் மாநாட்டுப் பணியாற்றிய கழகத் தோழர்கள் ஆகியோருக்கு கழக வெளியீடான புத்தகங்கள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டன. மாநாட்டில் திராவிடர் விடுதலைக் கழக புத்தகங்கள் 6,700 ரூபாய்க்கு விற்பனை ஆகின.

மண்டல மாநாட்டை தூத்துக்குடி, நெல்லை, தென்காசி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் சிறப்பாக நடத்தி திரளாக கலந்து கொண்டனர்.







**குடியாத்தத்தில்:** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் “நமக்கான அடையாளம் - திராவிட மாடல்” எனும் முழக்கத்தோடு மண்டலப் பொதுக் கூட்டம் 21.05.22 சனி மாலை 5 மணிக்கு வேலூர் மாவட்டம் குடியாத்தம் பழைய பேருந்து நிலையம் அருகில் வேலூர் கவிஞர் மு.மன்னார் நினைவு மேடையில் நடைபெற்றது.

வேலூர் காஞ்சிபுரம் ராணிப் பேட்டை திருப்பத்தூர் மாவட்டங் களில் நடைபெற்ற தெருமுனை பரப்புரைகளின் நிறைவாக இம் மண்டல பொதுக் கூட்டம் நடைபெற்றது. தெருவிளக்கு கலைக் குழுவினரின் பறை நிகழ்ச்சியுடன் தொடங்கியது.

தொடர்ந்து மதுரை சித்திரைசேனன்-ரத்னா இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி, மருத்துவர் அனிதா இரவுப் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சி, சுப்பிரமணி கலைக்குழுவினரின் சிலம் பாட்டம் ஆகியவை நடைபெற்றன.

மண்டல பொதுக்கூட்டத்திற்கு திவிக ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட கழக செயலாளர் இரா.பா. சிவா தலைமை தாங்கினார். ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகத் தலைவர் திலீபன் முன்னிலை வகித்தார். காஞ்சிபுரம் மாவட்டக் கழகத் தலைவர் ரவிபாரதி வரவேற்புரை யாற்றினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில அமைப்புச் செயலாளர் நீல.சந்திரகுமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வேலூர் பாராளுமன்ற தொகுதி செயலாளர் சிவ.செல்லபாண்டியன், தமிழ்நாடு எஸ்.சி./எஸ்.டி. அரசு அலுவலர் நலச்சங்கத்தின் மாநில பொருளாளர் ஆதி முத்துகுமரன், முரசொலி தமிழ் மன்றத்தின் நிறுவனர் செம்மங்குப்பம் கோபி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள். நிறைவாக திவிக வேலூர் மாவட்டப் பொருளாளர் சதீஸ் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 26th May 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN